# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8074786

C

1. District : Chennai PS: DVAC IK Yr Year: 2021 FIR No.: 12 Date 08.07.2021
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 06.07.2021 Date to : 1400 Hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 08.07.2021 Time : 0900 Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 08.07.2021 Time : 0930 Hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Tondiarpet Taluk office, Chennai 20 k.m North
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : Taluk office, Tondiarpet, Chennai
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : A. Suresh (b) Father's/ Husband's Name : Anandan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / ~~கணவர்~~ பெயர்
(c) Date / Year of Birth : 1985 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Two wheeler Mechanic (g) Address : NO 36/27, T.K. Garden 1st Lane, Kurukkupet Chennai. 21
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tamil Selvi, LRD Taluk office, Tondiarpet.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் No delay.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Sir,
Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. Suresh 08-07-21 S.S. 8.7.2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S.SENTHILKUMAR
Rank: நிலை Inspector of Police No. எண்
V&AC, SIC,
Chennai-16.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.12/2021 பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவலறிக்கை வரிசை எண்.12ன் தொடர்ச்சி பின்வருமாறு.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை, சிறப்பு புலனாய்வுக் குழு ஆய்வாளர் திரு.சு.செந்தில்குமார் ஆகிய நான் 08.07.2021ந் தேதி காலை சுமார் 09.00 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியிலிருந்து போது சென்னை கொருக்குப்பேட்டை, T.K. கார்டன், 1வது சந்தைச் சேர்ந்த A.சுரேஷ், என்பவர் எனது அலுவலகம் ஆஜராகி எழுத்துபூர்வமான புகார் மனு ஒன்றை என்னிடம் அளித்தார். அந்த புகார் மனு விவரம் பின்வருமாறு அனுப்புநர். A.சுரேஷ், ஆ/வ-35 எண்.36/27, T.K. கார்டன், 1வது சந்து, கொருக்குப்பேட்டை, சென்னை-21. பெறுநர், ஆய்வாளர். சிறப்பு புலனாய்வுக் குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சிறப்பு புலனாய்வு குழு, ஆலந்தூர், சென்னை-16. அய்யா, நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து கொண்டு அதன் அருகில் உள்ள இடத்தில் கணபதி ஆட்டோ ஓர்க்ஸ் என்ற டு வீலர் மெக்கானிக் கடை வைத்து மெக்கானிக்காக பணி செய்து வருகிறேன். மேற்கண்ட விலாசத்தில் நான் குடியிருக்கும் வீட்டை இரண்டு வருடங்களுக்கு முன்பு திரு.தேவராஜ என்பவரிடமிருந்து என்னுடைய மனைவி திருமதி.எஸ்.பாரதி பெயரில் விலைக்கு வாங்கினேன். அதன் பட்டாவினை என்னுடைய மனைவி திருமதி.எஸ்.பாரதி பெயரில் பட்டா மாற்றம் செய்ய கடந்த 05.11.2020 அன்று தண்டையார்பேட்டை தாலுக்கா அலுவலகத்தில் உள்ள இ-சேவையில் ரூ.60/- செலுத்தி விண்ணப்பித்திருந்தேன். எனக்கு விண்ணப்ப நகல் கொடுக்கவில்லை. அதற்கு பதிலாக ஒரு துண்டு சீட்டில் எஸ்.பாரதி பட்டா- 0330104086665 என்றும் ரூ.60/- paid என்று எழுதிக் கொடுத்தனர். பல நாட்களுக்கு பிறகு கடந்த 22.04.2021 அன்று 4.20

pm-க்கு என்னுடைய கைப்பேசி எண்.9941280824-க்கு தமிழ்நாடு அரசிடமிருந்து SMS வந்தது. அதில் "அன்புடையூர், வணக்கம்! தங்களது பட்டா மாறுதல் விண்ணப்ப எண்.2021/ 0153/02/001202/தண்டையார்பேட்டை பகுதி 3 மண்டல துணை வட்டாட்சியரால் 2021-04-22 அன்று அங்கீகரிக்கப்பட்டு தங்களது நில உரிமை ஆவணத்தினை http://eservices.tn/gov.in எனும் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்" என்று காணப்பட்டது. அதன்படி அதை பதிவிறக்கம் செய்ய 27.04.2021 அன்று மாலை சுமார் 2 மணியளவில் தண்டையார்பேட்டை தாலுக்கா அலுவலகத்தில் உள்ள இ-சேவை மையத்திற்கு சென்று, பதிவிறக்கம் செய்ய கேட்டேன். அங்குள்ள அலுவலர் அதை பதிவிறக்கம் செய்ய இயலவில்லை என்றும், முதல் மாடியில் LRDயை போய் பார்க்க சொன்னார்கள். நான் முதல் மாடியில் LRDயாக உள்ள தமிழ்செல்வி அவர்களை சந்தித்து என்னுடைய மனைவி திருமதி.எஸ்.பாரதி பட்டா மாற்றம் சம்மந்தமாக SMS வந்தது குறித்தும், அதி பதிவிறக்கம் ஆகவில்லை என்றும் கூறினேன். அதற்கு அவர் எஸ்.பாரதி பட்டா மாற்றம் குறித்த கோப்பு என்னிடம் தான் உள்ளது என்றும், ரிசர்வ் வங்கியில் ரூ.50/- அரசுக் கணக்கில் செலுத்தி வர சலான் ஒன்று எழுதிக் கொடுத்தார். அதை ரிசர்வ் வங்கியில் என்னுடைய ஆந்திரா வங்கி கணக்கு காசோலை எண்.000014 மூலம் ரூ.50/- செலுத்தி டோக்கன் எண்.076029 பெற்று அதை LRD தமிழ்செல்வி அவர்களிடம் காண்பித்தேன். மேலும் 05.05.2021ஆம் தேதி ரூ.50/- செலுத்தியதற்கான அத்தாட்சி கிடைக்கும் என்று ரிசர்வ் வங்கியில் கூறியதாக அவரிடம் கூறினேன். அதன் பிறகு எனது சொந்த வேலை காரணமாக வெளியூர் சென்றுவிட்டு கடந்த 01.07.2021 ஊர் திரும்பினேன். பின்னர் 06.07.2021ந் தேதி ரூ.50/- செலுத்தியதற்கான அத்தாட்சியை ரிசர்வ் வங்கியில் பெற்று கொண்டு சுமார் 02.00 மணியளவில் LRD தமிழ்செல்வி அவர்களிடம் அதை சமர்ப்பித்தேன். அதற்கு அவர் சரி, சரி, உங்களுடைய கோப்பை எடுத்து அதில் ஸ்கெட்ச் போட்டு வட்டாட்சியரிடம் சமர்ப்பித்து பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை

எடுக்க ரூ.4,000/- லஞ்சமாக தர வேண்டும் என்று கேட்டார். நான் என்னிடம் பணம் இல்லை என்று கூற, அவர் ரூ.1,000/- குறைத்துக் கொண்டு ரூ.3,000/- கொடுத்தால் தான் உங்கள் மனைவி எஸ்.பாரதி பெயரில் பட்டா மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்க முடியும் என்று கறாராக கூறி விட்டார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் தங்களிடம் இந்த புகாரை அளிக்கிறேன். என்னிடம் என் மனைவி எஸ்.பாரதி பெயரில் பட்டா மாற்றம் செய்ய லஞ்சம் கேட்ட LRD தமிழ்செல்வி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு sd.xxxxxx (A.சுரேஷ்) 08.07.2021.

sir.

Received this petition on 08.07.2021 at 09.00 hrs and after getting permission from the concerned a quiet and discreet verification was made on the petition, I am registering a case in V&AC, SIC, HQ Cr.No.12/2021, u/s, 7 of Prevention of Corruption (Amendment ) Act 2018 at 09.30hrs.

S.Sc— 8.7.2021

S.Senthilkumar,
Inspector of Police,
Special Investigation Cell,
vigilance and Anti-Corruption,
Chennai-16.